2013 ஏப்ரல் 23]

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 305, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

305—

புதிய வட்டம்

***273**—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் துவக்குவதற்கு, வட்டத்திற்கு உண்டான அளவுகோல்களை, பிரிக்கக் கோருகின்ற பகுதி பூர்த்தி செய்யாத காரணத்தினால், புதிய வட்டம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 297, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.